சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

<u>பு.த.சா.1 விஸ்வநாதன் த/பெ கோவிந்தசாமி வயது.48</u>

எதிரியின் கணவர் என்னுடைய நன்பர் ஆவார். 26.08.2020 அன்று எதிரியின் கணவர் எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் மேற்படி அறிவிப்பு என்றால் சரிதான். **அந்த 26.08.2020 தேதியிட்ட அறிவிப்பானது எ.ம.சா. ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் எனது வழக்கறிஞர் மூலம் 15.09.2020 தேதியில் எதிரியின் கணவருக்கு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் மேற்படி அறிவிப்பு என்றால் சரிதான். **அந்த 15.09.2020 தேதியிட்ட பதில் அறிவிப்பானது எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த அறிவிப்பில் எதிரியின் கணவர் எனக்கு தூரத்து உறவு என்று நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். நானும், எதிரி மற்றும் எதிரியின் கணவரும் ஒரே பகுதியில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரியின் கணவரை அடித்து மிரட்டி சொத்துக்களை எழுதி வாங்க முற்பட்டேன் என்று எனது பெயரிலும், எனது சகோதரர் முனிசாமி பெயரிலும் எதிரியின் கணவர் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி புகாருக்கு கொடுத்த ரசீது என்றால் சரிதான். **அந்த புகார் ரசீது எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி புகாரின் அடிப்படையில் என்னை காவல் துறையினர் அழைத்து விசாரித்து, அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று தெரியவந்ததால் புகாரை முடித்துவிட்டார்கள். அந்த புகாரில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். எ.ம.சா.ஆ.2 பதில் அறிவிப்பானது விவரங்கள் நான் சொல்ல தான் எனது வழக்கறிஞர் தயார் செய்து அனுப்பினார் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 அறிவிப்பில் நான் எதிரியையும், அவரது கணவரையும் மிரட்டி இவ்வழக்கு காசோலை மற்றும் இரண்டு காசோலைகள் பெற்றுச்சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான், அதை நான் மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். மேற்படி அறிவிப்பில் எதிரியிடமும் எதிரியின் கணவரிடமும் வருவாய் ஆவணங்களில் மிரட்டி கையொப்பம் பெற்றுச்சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான், அதை நான் மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். திருப்பத்தூர் ICICI வங்கி காசோலை எண் 000914 என்ற காசோலையை நான் அச்சுறுத்தி பறித்து

எனது சகோதரர் முனிசாமி என்பவரை வைத்து பெங்களூரில் எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதை நான் மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். எதிரியும், எதிரியின் கணவர் பிறந்ததிலிருந்து பல்லளப்பள்ளி கிராமத்தில் தான் வசிக்கிறார். மேற்படி கிராமம் எனக்கும் பூர்வீகம் என்றால் சரிதான். எனது அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணையிலும் நான் எந்த தொழில் செய்வதாக குறிபிடவில்லை என்றால் சரிதான். எதிரியும் எதிரியின் கணவரும் சேர்ந்து வட்டி தொழில் மற்றும் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறார்கள். ரியல்எஸ்டேட் தொழில் வெளியூரிலும் செய்து வருகிறார்கள். அவர்கள் மேற்படி தொழில் செய்து வர வில்லை என்றும், எதிரியின் கணவர் கிருஸ்துவ போதகராக 17 ஆண்டுகளாக உள்ளார் என்றும், நான் வழக்கிற்காக மேற்படி விவரத்தை தவறாக சொல்லிகிறேன் என்றால் சரியல்ல. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் மற்றும் பெயிண்டிங் கான்டெக்டர் செய்து வருகிறேன். சுமார் 20 ஆண்டுகளாக பெயிண்டிங் கான்டெக்டர் செய்து வருகிறேன். நான் பெயிண்டிங் கான்டெக்டர்யை வேலை ஆட்களை வைத்து செய்து வருகிறேன். தனப்பட்ட நபர்களின் வீட்டிற்கும் மற்றும் நிறுவனத்திற்கும் சேர்ந்து தான் செய்கிறேன். எனது வேலைக்கு பணமாக தான் என்னிடம் கொடுப்பார்கள்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 14.12.2022 ஒத்திவைக்கபடுகிறது.

Signature of witness.